சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– திருமதி. இரா. சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,

| | | | |
|---|---|---|---|
| ம.சா. | 2 | நாள் : 11.08.2023 | |
| GWOP. No. | 347/2023 | | |
| பெயர் | சந்திரமோகன் | த/பெ | கணேசன் |
| வயது | 47 | ஊர் | ஆனந்ததாண்டவபுரம் |

சாட்சி அழைக்கப்பட்டு திருமதி. M. மாலதி இருக்கை எழுத்தர் நிலை – 2 என்பவரால் உறுதி மொழி செய்யப்படுகிறார்

**குறுக்கு விசாரணை:**

மனுதாரர் தினேஷ்குமார் என் நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். அவர் உடன்பிறந்தவர் ஒரே ஒரு அண்ணன் என்றால் சரிதான். மனுதாரரின் அண்ணன் அவரது மனைவி குழந்தைகளுடன் சென்னையில்தான் வசித்து வருகிறார். மனுதாரரின் வீட்டில் அவர் தகப்பனார் மட்டும்தான் உள்ளார் என்றால் அவர் சித்தியும் இருக்கிறார். மனுதாரரின் சித்தி என்றால் மனுதாரின் தகப்பனாரின் தம்பி மனைவி. மனுதாரரின் தகப்பனாரின் தம்பி உயிருடன் இல்லை. அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டி அருகில் வாழக்கொட்டை என்ற ஊரில் மனுதாரரின் தகப்பனாரின் தம்பி மகள் திருமணமாகி வசித்து வருகிறார். மனுதாரரின் சித்தப்பாவிற்கு வேறு யாரும் குழந்தைகள் கிடையாது. மனுதாரரின் சித்தி அவரது மகளுடன் வாழக்கொட்டையில்தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. மனுதாரர் சென்னையில் வேலை பார்க்கிறார் வீட்டிலிருந்து கொண்டே வேலை பார்க்கிறார். மனுதாரரின் சித்திக்கு 60 வயதிற்கு மேல் இருக்கும். அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார் என்றால் நன்றாகத்தான் இருக்கிறார். நான் மனுதாரருடன் சேர்ந்து குடித்துவிட்டு எதிர்மனுதாரர் வீட்டில் தகராறு செய்வதாக சொல்வது தவறு. மனுதார் திருமணத்திற்கு முன்பே வீட்டை கட்டி குடிபோய்விட்டார்கள். எந்த வருடம் என்று எனக்கு தெரியாது. வீடு கட்டி ரொம்ப நாட்கள் ஆகிறது. நான் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.